Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்,

பி.பள்ளிபட்டி ஊராட்சி தலைவர், அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமலா.P

ந.க.எண்: 1/பி.ப.ஊ நாள்: 08/08/2024

பொருள்:

மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு, தருமபுரி – தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்/ ஊராட்சி ஒன்றியம், பி.பள்ளிப்பட்டி ஊராட்சி, ஜங்காலஅள்ளி வருவாய் கிராமம் – சர்வே எண்கள்:34/1B & 35/2A–ல் 0.97.20 ஹெக்டேர் அல்லது 9720.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான கொள்கை ஒப்புதல் வழங்கப்பட்டது, சாலைகள், உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீடு மற்றும் மின்சார வாரியத்திற்கு தானமாக பதிவு செய்துள்ளது – மனைப்பிரிவு ஒப்புதல் கட்டணம் செலுத்தப்பட்டது – இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி மாவட்டம், அவர்களின் இணையதள விண்ணப்ப எண்: LMY3BMN9/2024/TCP, நாள்: 01/07/2024

2. அரசாணை நிலை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (த. வ.4(3)) துறை நாள் : 04.05.2017.

3. அரசாணை எண்.225 ஊரக வளர்ச்சித்துறை (சி2) நாள் : 18.08.1997

4. பி.பள்ளிப்பட்டி ஊராட்சி மன்ற தீர்மானஎண். 2 நாள்: 7. 8. 2024

உத்தரவு:

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பி.பள்ளிப்பட்டி ஊராட்சி, ஜங்காலஅள்ளி வருவாய் கிராமம் சர்வே எண்கள்:34/1B & 35/2A–ல் 0.97.20 ஹெக்டேர் அல்லது 9720.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2 ல் காணும் நடவடிக்கை ஆணையில், மாவட்டநகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தர்மபுரி மாவட்டம், அவர்களால் வழங்கப்பட்ட இணையதள விண்ணப்ப எண்:LMY3BMN9/2024/TCP, நாள்: 01/07/2024-ல், ம.வ/மா.ந.ஊ.அ (த.மா) (SWP) எண்:60/2024 என எண்ணிட்ட மனை ஒப்புதலும் உரிய நிபதனைகளுக்குட்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கியும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க, உள்ளாட்சி நிர்வாகத்திற்கு செலுத்தபட வேண்டிய கட்டணங்களை நிர்ணயம் செய்து, மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தர்மபுரி மாவட்டம் அவர்களின் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/- யும் மற்றும் விதி எண்.9 ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்ற கட்டணமாக வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

மேற்படி 1-45 மனைகளுக்கு குடியிருப்பு மனைபிரிவிற்கான ஒப்புதல் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் கீழ்க்கண்ட விவரப்படி செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பரிசீலனைக்கட்டணம் ரூ.1000 வீதம், 45 மனைகளுக்கு ரூ.45,000/-, இடநேராய்வு கட்டணம் ரூ.1,000/- பெற்றும் விதி 9 ன் படி மனைப்பிரிவு இடத்திற்கு விற்பனை மதிப்பில் 3% தெகையினை மனுதாரர்களிடமிருந்து பெற்று அரசு தலைப்பு கணக்கில் செலுத்தப்பட்டது. எனவே, மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தர்மபுரி மாவட்ட அலுவலகத்திலிருந்து ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி மனைப்பிரிவிற்கு, பி.பள்ளிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் மூலம் இறுதி ஒப்புதலளிக்கப்படுகிறது.

சேலம் மாவட்டம், சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் நகரமரை அடிவாரம், கோல்டன் வேலி அபார்ட்மெண்ட் 305, பிளாக்-A, கதவு எண்:101/17, முகவரியில் வசிக்கும் திரு.கணேசன் அவர்களின் குமாரர் திரு.A.G.பவித்ரா கிருஷ்ணா என்பவருக்கு, அங்கீரிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு, மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தர்மபுரி மாவட்டம், அவர்களால் வழங்கப்பட்ட இணையதள விண்ணப்ப எண்:LMY3BMN9/2024/TCP, நாள்: 01/07/2024-ல், ம.வ/மா.ந.ஊ.அ (த.மா) (SWP) எண்:60/2024 என எண்ணிட்ட உள்ளாட்சி நிர்வாகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் முறைப்படி 1-45 மனைகளுக்கு மட்டும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. தருமபுரி மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவும் அல்லது எந்த மனையையும் கட்டடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்தவொரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனை தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே TNCDPR – 2019 ல் குறிப்பிட்டுள்ள Residential Use – ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறை முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த உயர் அழுத்த மின்கம்பி பாதை தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கே அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறே மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்திற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கும் மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8. மனுதாரர் மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும், உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.
9. மேற்படி மனைப்பிரிவிற்கு தருமபுரி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் தொழில்நுட்ப அனுமதி (Technical Approval) மட்டுமே வழங்கப்பட்டது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசிலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.
10. மனுதாரர், பி.பள்ளிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களிடமிருந்து மனைப்பிரிவு இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு நுழைவாயிலில் 6X4 அளவிலான நிரந்தர தகவல் பலகையின் மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
11. மனுதாரர் சமர்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின் படி நில உரிமை குறித்து பரிசிலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நிலஉரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால், மேற்படி அனுமதியானது எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட வரைபட நகல் மனை வாங்குபவர்க்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

P. Thirumala

தலைவர்

B. பள்ளிப்பட்டி ஊராட்சி,

பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம்.

ஊராட்சி தலைவர்,

பி.பள்ளிப்பட்டி

<u>பெறுநர்:</u>

திரு.A.G.பவித்ரா கிருஷ்ணா த/பெ. திரு.கணேசன்,

கதவு எண்:101/17, பிளாக்-A, கோல்டன் வேலி அபார்ட்மென்ட் 305,

ரெட்டியூர் நகரமரை அடிவாரம், சேலம் மாநகராட்சி,

சேலம் மாவட்டம் – 636004.

நகல் : மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தர்மபுரி மாவட்டம், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : சார்பதிவாளர் அலுவலகம், பாப்பிரெட்டிப்பட்டி, தகவலுக்காக.

நகல் : வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பாப்பிரெட்டிப்பட்டி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

பி.பள்ளிப்பட்டி ஊராட்சி
மனைப்பிரிவு அனுமதி வழங்குதல்

பி.பள்ளிப்பட்டி ஊராட்சி ந.க.எண்: 01, நாள் 07.08.2024

சேலம் மாநகராட்சி ரெட்டியூர் நகரமலை அடிவாரம், கதவு எண் 101-17 பிளாக் A கோல்டன் அபார்ட்மெண்ட் 305, வசிக்கும் திரு. A.G.பவித்ரா கிருஷ்ணா அவருக்கு சொந்தமான நிலத்தின் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம்/ ஊராட்சி ஒன்றியம், பி.பள்ளிப்பட்டி ஊராட்சி ஜங்காலஅள்ளி வருவாய் கிராமம் சர்வே எண் 34-1B, 35-2A-ல் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் உள்ள 1 முதல் 45 மனைப்பிரிவில் மட்டும் தமிழ்நாடு அரசு ஊராட்சியின் சட்டம் அரசானை நிலை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள் (த.வ 4(3)) 04.05.2017 மற்றும் நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் தருமபுரி அவர்களின் இணைய வழி ந.க.எண்: LMY3BMN9/2024/TCP நாள் 01.07.2024-ல் ம.வ/ம.ந.ஊ.அ (தமா) (SWP) எண் 60/2024 என எண்ணிட்ட மனை ஒப்புதலும் மற்றும் பி.பள்ளிப்பட்டி ஊராட்சி தீர்மாண எண் 2 நாள்: 07.08.2024 படி இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட காலிமனை 1 முதல் 45 வரை மொத்தம் 45 மனைகள் மட்டும் அனுமதி வழங்கப்படுகிறது.

தலைவர்

தலைவர்
B. பள்ளிப்பட்டி ஊராட்சி,
பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம்.

Signature valid

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம்/ஊராட்சி ஒன்றியம், பி.பள்ளிபட்டி ஊராட்சி, ஜங்காலஅள்ளி கிராமம், ச.எண்கள்: **34/1B & 35/2A** ஆகியவற்றில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1 செ.மீ : 4 மீ (அளவுகள் மீட்டரில்)

இணையதள விண்ணப்ப எண் :LMY3BMN9/2024/TCP

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு	: 0-97.20 ஹெக்டர் (அ) 9720.00 ச.மீ
மனைப்பிரிவின் சாலை பரப்பு	: 3190.80 ச.மீ
ஒதுக்கிய மனைகள்	: 45
மனைப்பிரிவின் எல்லை	:
நிலையிலுள்ள சாலை	:

பொது ஒதுக்கீடு :

மனைப்பிரிவின் பரப்பு	: 9720.00 ச.மீ
மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு (சாலை விஸ்தரிப்பு உட்பட)	: 3190.80 ச.மீ
மீதமுள்ள மனைப்பிரிவின் பரப்பு (சாலை பரப்பு நீங்கலாக)	: 6529.20 ச.மீ
10 % பொது ஒதுக்கீடு	: 652.92 ச.மீ

10 % பொது ஒதுக்கீடு 652.92 ச.மீ இடத்திற்கான தொகை அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது :

மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு	: 3190.80 ச.மீ
பொது உபயோகம்.	: 43.09 ச.மீ (0.66%)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது :

பொது உபயோகம்.	: 34.66 ச.மீ (0.53%)

கட்டிட வரம்பு :

9.00 மீ அகல சாலைகள் வரை 1.50 மீ விடப்படல் வேண்டும்.

9.00 மீ க்குமேல் 18.00 மீ வரை அகலமுள்ள சாலைகளுக்கு 3.00 மீ விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு :

12.00 மீ அகல சாலைகள் வரை 1.50 x 1.50 மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புறவளர்ச்சித் துறை நாள்: 09.12.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், பி.பள்ளிபட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களால் உறுதி செய்துகொள்ளப்பட வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6" X 4" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதின் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம், மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
7. புல எண்.35/2A-ல், புல வரைபடத்தில் கண்டுள்ளவாறு Field Channel-ஐ மனைப்பிரிவு வரைபடத்தில் நிலைநிறுத்தப்பட வேண்டும்.
8. The Tamil Nadu Government In G.O.Ms.No.112, Housing And Urban Development Department Dated:22.06.2017 Have Approved the Tamil Nadu Real Estate Regulation & Act 2016, The Promoter has To Advertise, Market, Book Sell (or) Offer For Sale (or) Invite Persons to Purchase In any manner any Plot, apartment (or) building as the case May Be, In Any Real Estate Project (or) Part Of It Only After Registering The real Estate Project With The Real Estate Regulatory Authority."

ம.வ / மா.ந.ஊ.அ (த.மா) (SWP) எண்: **60/2024**

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தருமபுரி மாவட்டம்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate